# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

**மானியக் கோரிக்கை எண் – 37**

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை**

## அறிவிப்புகள்

## 2020–2021

**பி. தங்கமணி**

**மின்சாரம், மதுவிலக்கு மற்றும்**

**ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**

©

**தமிழ்நாடு அரசு**

**2020**

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# மானியக் கோரிக்கை எண் – 37

# மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

# அறிவிப்புகள் 2020 - 2021

**1. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபானத் தொழிலில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல்**

**Providing financial assistance for Rehabilitating persons who have been weaned away from illicit distillation and illicit liquor trade**

தமிழ்நாட்டில், மதுவிலக்குக் குற்றங்களுக்கு சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி மனம் திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காகவும், அவர்கள் மீண்டும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவுவதற்காகவும், 2011–2012–ஆம் ஆண்டு முதல் ரூ.5.00 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டிலும், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.5.00 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்படும்.

## 2. மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

## Conducting Awareness Campaigns against Consumption of Liquor and Drunken Driving

போலி மதுபானங்கள் மற்றும் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி மாவட்டந்தோறும் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்த, 2015–2016–ஆம் ஆண்டு முதல் ரூ.3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2018–ஆம் ஆண்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய (மதுபானங்களின் தரங்கள்) ஒழுங்குமுறைகளில், கீழ்க்கண்ட சட்டப்பூர்வமான எச்சரிக்கை குறித்த வாசகங்கள் மதுபான பாட்டில்களில் ஒட்டப்படும் லேபிள்களில் அச்சடிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது:–

**"மது அருந்துதல் உடல் நலத்திற்கு கேடு"**

**"CONSUMPTION OF ALCOHOL IS INJURIOUS TO HEALTH"**

**பாதுகாப்பாக இருப்பீர் – மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டாதீர்"**

**"BE SAFE – DON'T DRINK AND DRIVE"**

இதனடிப்படையில், இந்த நிதியாண்டு முதல், மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரத்துடன், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரத்தையும் இணைத்து மேற்கொள்ள, **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ. 3.50 கோடியாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனைப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்**

## Pay increase for TASMAC Retail Vending Personnel

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் (டாஸ்மாக்) 6,913 மேற்பார்வையாளர்கள், 15,347 விற்பனையாளர்கள் மற்றும் 3,437 உதவி விற்பனையாளர்கள் ஆக மொத்தம் 25,697 சில்லறை விற்பனைப் பணியாளர்கள் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு 2011–ஆம் ஆண்டு முதல் 2019–ஆம் ஆண்டு வரை, ஒவ்வொரு ஆண்டும் தொகுப்பு ஊதியமானது உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த ஆண்டும், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,** மேற்குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு மாத தொகுப்பு ஊதியம் ரூ.500/– கூடுதலாக ஏப்ரல், 2020 முதல் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.15.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. தெளிந்த சாராவி, போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுவகைகள் ஆகியவற்றின் கடத்தல்களைக் கண்டுபிடித்து கைப்பற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலுவலர்களுக்கும் மற்றும் அவர்களுக்கு உதவும் உள்ளூர் காவலர்களுக்கும் பண வெகுமதிகள் வழங்குவதற்காக ஊக்க நிதி வழங்குதல்**

**Monetary rewards to Prohibition Enforcement Wing Officials and local Police who help in seizure of smuggled Rectified Spirit, spurious and non-duty paid liquor**

தெளிந்த சாராவி, போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபான வகைகள் ஆகியவற்றின் கடத்தல்களைக் கண்டுபிடித்து கைப்பற்றும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலகுகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் அவர்களுக்கு உதவும் உள்ளூர் காவலர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு பண வெகுமதிகள் வழங்குவதற்கு, **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**5. போதைப் பொருள் குற்றவாளிகள் மீண்டும் அத்தொழிலுக்கு திரும்பாமல் இருக்க அவர்தம் மறுவாழ்விற்கு நிதி உதவியினை மானியமாக வழங்குதல்**

**Providing financial assistance for Rehabilitation of drug offenders to prevent them from going back to illegal activities.**

தமிழ்நாட்டில், போதைப் பொருள் விற்பனை மற்றும் பயன்பாட்டினை ஒழிக்கவும், அதன் மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலுமாக களையவும், போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

போதைப்பொருள் தொடர்பான குற்றச் செயல்களில் ஈடுபட்டு கைதானவர்கள், விடுதலைக்குப்பின், மனம் திருந்தி மறுவாழ்விற்கு திரும்பும்போது அவர்களுக்கு சமூகத்தில் போதுமான உதவிகள் கிடைக்காமல் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி அவர்கள் மீண்டும் தவறான பாதைக்கு செல்லாமல் சமுதாயத்தில் உயர்வடைய வேண்டும் என்ற நோக்கில் அவர்களின் மறுவாழ்விற்கென இந்த நிதியாண்டில், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 6. போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

## Conducting Awareness Campaign against drug abuse

போதைப் பொருள் அற்ற சமுதாயத்தை உருவாக்க போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. போதைப் பொருட்களினால் ஏற்படும் தீமைகள் குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தமிழக போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினர் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

மாணவர்கள் மத்தியிலும், இளைஞர்கள் மத்தியிலும், போதைப் பொருளினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த இந்த நிதியாண்டில், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் காவல்துறைப் பணியாளர்கள் மற்றும் தனிநபர்களுக்கு சிறப்பு வெகுமதிகள் வழங்குதல்**

## Sanctioning of Special Rewards for Police personnel and Private individuals who play pivotal role in preventing drug trafficking

போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு கடந்த **1963–**ஆம் ஆண்டிலிருந்து போதைப்பொருள் ஒழிப்பில் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இப்பிரிவின் முக்கியப் பணியானது போதைப்பொருள் நடமாட்டம் மற்றும் விற்பனை தொடர்பான இரகசிய தகவல்கள் சேகரிப்பது மற்றும் அது தொடர்பான தொடர் நடவடிக்கை மேற்கொள்வதாகும்.

போதைப்பொருள் குறித்து தகவல் தெரிந்தவர்கள் அதனை சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிப்பதற்கு தயங்குகின்றனர். எனவே, அவர்களின் அச்சத்தைப் போக்கவும், மேலும் தகவல்களை உடனுக்குடன் காவல் துறைக்குத் தெரிவிக்க ஊக்குவிக்கவும், போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் காவல்துறைப் பணியாளர்கள் மற்றும் தனி நபர்களுக்கு சிறப்பு வெகுமதிகள் வழங்க இந்த நிதியாண்டில், **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூ. 15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**பி. தங்கமணி**
**மின்சாரம், மதுவிலக்கு மற்றும்**
**ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**